ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கையை நடவு செய்த முதல்வர்!

இனி பெரியார் அச்சில்
உலகம் சுழலும்
மாண்புமிகு முதல்வரே,
தளபதி அவர்களே,
உங்களின் இலட்சியம்
தமிழ்நாட்டை உயர்த்துவது
தமிழை உயரச் செய்வது
தமிழினத்தை வளர்ப்பது!

உங்கள் பயணத்தால்
உலகத் தமிழர்களின்
தலைநகரானது ஜெர்மனி!
அயலகத் தமிழர்களின்
அன்புத் திருவிழாவில்
ஜெர்மனி சிலிர்த்தது!

இந்தியாவின் ஜெர்மனி
தமிழ்நாடு என்றே
இதயப் பாலத்தை
இணைத்து வைத்தீர்!

முதலீட்டாளர் சங்கமத்தை
முன்னின்று நடத்தினீர்கள்!

தமிழ்நாட்டின்
தொழில் வளர்ச்சிக்கும்
பொருளாதார வளர்ச்சிக்கும்
ஒப்பந்தங்கள் செய்தீர்!

ஒரு பயணத்தில் கோடி
விடியல்களை உதிக்கச்
செய்தீர்கள்!

ஆயிரம் ஆயிரம்
இளைஞர்கள் வாழ்வில்
நம்பிக்கை வெளிச்சத்தை
நடவு செய்தீர்கள்!

இங்கிலாந்து மண்ணில்
உங்களுக்கு திரும்பிய
திசையெல்லாம்
வசந்த வரவேற்பு!

'திராவிட மாடல்' தலைவரே,
அந்நாட்டின்அத்தனை
கதவுகளும்
அகலத் திறந்தன;
போற்றிப்புகழ்ந்தன!

சந்திப்புகள் அனைத்தும்
சரித்திரமாயின;
தமிழ்நாட்டின் தொழில் புரட்சிக்கு
அடித்தளமாயின!

அறிவுலகத் தாய்
ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்
கழகத்தில்
அறிவுலகத் தந்தை
தத்துவப் பேராசான்
பெரியாரின் படத்தை
திறந்து வைத்தீர்கள்!

கேள்விப் புரட்சியால்
சமூக மாற்றத்தை
உருவாக்கிக் காட்டிய
தமிழ்நாட்டின் சிற்பி!

உலகின்
சிந்தனைத் தேடலுக்கு
தந்தை பெரியாரை
முதலீடாய் தந்தீர்கள்!

இனி பெரியார் அச்சில்
உலகம் சுழலும்

பெரியார்பேரனே!
அண்ணாவின் அன்புத் தம்பி
கலைஞரின் தமிழ்மகனே
உங்கள் அத்தனை பயணத்திலும்
தமிழ்நாடு வெற்றிகள் கூடும்!
திராவிட மாடலை
திசைகள் வணங்கும்!

கு.வாஞ்சிநாதன்
தலைமைக் கழகப்
பேச்சாளர்
கடலூர்

தலைமைச் செயலகத்தில், நேற்று (08.09.2025) போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை அறிவிப்பின்படி வாகனங்களில் ஒலி அளவினை கண்டறிய 255 ஒலி அளவிடும் கருவிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், போக்குவரத்து ஆணையர் திருமதி கஜலட்சுமி, வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைமையில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை!

திருவள்ளூர் செப் 09;-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மனித குலத்தின் சமூக விடுதலைக்கான மாபெரும் தலைவர் தந்தை பெரியார். தன் வாழ்நாளின் கடைசி நாட்கள் வரை சமூகநீதிக்காகச் சளைக்காமல் பாடுபட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் அவர். தன் மனதில் தோன்றிய சிந்தனைகளை எவருக்கும் அஞ்சாமல் துணிந்து கூறியவர். அவருடைய பகுத்தறிவு - சுயமரியாதைச் சிந்தனைகள் சமுதாயத்தின் இருட்டை விரட்டி வெளிச்சத்தை உண்டாக்கின. தன்னுடைய கருத்துகளாகவே இருந்தாலும் அதனைக் கேட்பவர்கள் தங்களுடைய சொந்த புத்தியினால் சிந்தித்து, அதன் பிறகே ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்திய உலகச் சிந்தனையாளர் தந்தை பெரியார். அவர்களின் பிறந்த நாள் விழா

தி.மு.கழகத்தை தோற்றுவித்தவரும், கடமை, கண்ணியம் கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு கற்றுத் தந்தவரும், தமிழ் இனம், தமிழ் மொழி என்ற உணர்வு மிக்க கருத்துக்களை மக்களிடம் பரப்பி தமிழருக்கு பாதுகாப்பு இயக்கமாக தி.மு.கழகத்தை மாற்றி அதன் மூலம் கழக ஆட்சியை தமிழ்நாட்டில் அமைத்தவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா. அவர்களின் பிறந்த நாள் விழாவும்

திராவிட இன மக்களின் உரிமைகளை பாதுகாத்திடவும், ஆதிக்க

மற்ற சமுதாயத்தை அமைத்திடவும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், 1949 ஆம் ஆண்டு - செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய நாள் விழாவை

தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு தி.மு.க. முப்பெரும் விழா கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 ஆம் தேதி அன்று நடைபெறுகிறது இந்த விழாவில் தி.மு.க.வினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று கழக தலைவரும், முதல்வர் அவர்கள் அழைப்பு விடுத்து உள்ளார்

எனவே கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில்

மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் நிர் வாகிகள் வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர் கள் நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் தொண்டர் கள் உறுப்பினர்கள் அனைவரும் பெருந்திர ளாக நடைபெறும் முப் பெரும் விழாவில் தவறா மல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என திரு வள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலா ளர் திருத்தணி எஸ்.சந்தி ரன் எம்.எல்.ஏ அறிக்கை யின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தொண்டர் அணி

மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர் நியமனம்

தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விருதுநகர் வடக்கு மாவட்டம்

சிவகாசி மாநகரம்

தலைவர் - ஆர். செந்தில்குமார் 372, முருகன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஆர். குருசாமி 35, மருதுபாண்டியன் மேட்டுத் தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - ஜி.ஜி. முருகன் 1/2சி, ஆலாவூரணி அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) தா. ஸ்டீபன் செல்லதுரை 16, எம்.ஜி.ஆர். காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 2) க. மாரிச்செல்வம் 666, காமராஜர் ரோடு, அறிஞர் அண்ணா காலனி 10வது தெரு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம். 3) வி. மருதுபாண்டியன் 36எ, பெரியார் காலனி, ஆலமரத்துப்பட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 4) ஆர். முத்துக்குமார் 467, காமராஜர் ரோடு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம். 5) க. முருகன் 30/30, கண்ணகி காலனி, தொகுப்பு வீடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் வேலுமணி அவர்கள், நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **கே.பிரபுகிருஷ்ணா** (மிட்டப்பள்ளி, பாலி நாயனப்பள்ளி, பர்கூர் வடக்கு, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 08-09-2025.

மாஸ்டர் பெ. சேகர்
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை

நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலப் பணிகள்!

பொதுப்பணிகள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேரில் ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை,செப்.9-

சென்னை அண்ணா சாலையில் தேனாம் பேட்டை முதல் சைதாப் பேட்டை வரை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் 3.20 கி.மீ நீள முள்ள நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலப் பணிகள் 621 கோடி ரூபாய் மதிப் பீட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 19.01.2024 அன்று தொடங்கி வைத்தார்.

இப்பணியின் முன்னேற்றத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் ஏ.வ. வேலு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தற்போது 40 சதவிகித பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், மெட்ரோ சுரங்கப்பாதை மற்றும் பிற இடங்களில் நடைபெறும் அடித்தள, மைக்ரோ பைல், ஜியோ சிந்தடிக் லேயர் மற்றும் வெல்டிங் பணிகளை விரைவாக முடிக்கவும், மழைக்காலத்திற்கு முன் அடித்தள பணிகள் நிறைவு பெறும் வகையில் வேகப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பணிகள் நடைபெறும் இடங்களில் போக்குவரத்து காவல்துறை, மின் வாரியம், மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம், வனத் துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து, பொதுமக்கள் இடையூறு இல்லாமல் பணிகள் நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் தலைமை பொறியாளர் சத்திய பிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அதிகாரி சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர் சரவண செல்வம், ஒப்பந்ததாரர் ஜே குமார், உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

இன்று 11 வார்டுகளில் நடைறுகிறது!

சென்னை.செப்.9-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (09.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-2ல் காமராஜ் நகரில் உள்ள எண்ணூர் வியாபாரிகள் சங்கம், மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-15ல் புது நாப்பாளையத்தில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளி மைதானம், மாதவரம் மண்டலம் (மண்டலம்-3), வார்டு-31ல் புழல், கதிர்வேடு, செம்பியம் ரெட்ஹில்ஸ் பிரதான சாலையில் உள்ள எம்.பி. திருமண மற்றும் மாநாடு மையம், இராயபுரம் மண்டலம் (மண்டலம் - 5) வார்டு-50ல் எஸ்.என். செட்டி தெருவில் உள்ள அறிவகம் திருமண மாளிகை, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-92ல் முகப்பேர் கிழக்கு, கோல்டன் ஜார்ஜ் நகர், TNEB சாலையில் உள்ள எஸ். கே.வி. திருமண மண்டபம், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-106ல் அரும்பாக்கம், எம். எம்.டி.ஏ. காலனியில் உள்ள

முகமது சதக் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-109ல், நுங்கம்பாக்கம், மத்திய பள்ளி சாலையில் உள்ள கில் நகர் விளையாட்டு மைதானம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம் - 10) வார்டு-132ல் டாக்டர் அம்பேத்கர் சாலையில் உள்ள சமுதாயக்கூடம், வளசரவாக்கம் மண்டலம்

(மண்டலம்-11) வார்டு-143ல் நொளம்பூர், முகப்பேர் மேற்கு சாலையில் உள்ள வேலம்மாள் ஹால், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம் - 12) வார்டு-160ல் சன்னியாசி, சுபேதார் கோவில் தெருவில் உள்ள எஸ்.வி.எஸ். ஜெயின் சங்கம், அடையாறு மண்டலம் (மண்டலம் - 13) வார்டு-169ல் சைதாப்பேட்டை, தாண்டர் நகரில் உள்ள சமுதாயக் கூடம்,

ஆகிய 11 வார்டுகளில் நடைபெற வுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

தலைமைச் செயலகத்தில், நேற்று (08.09.2025) சுற்றுலாத் துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தலைமையில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தி. மு. க. தொழிலாளர் அணி

மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நீயமனம்

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருநெல்வேலி மத்திய மாவட்டம்

திருநெல்வேலி கிழக்கு மாநகரம்

அமைப்பாளர் - எஸ். கந்தன் 7/190, சீவலப்பேரி ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - 1) முஹைதுன் அப்துல் காதர் 8/376, ஆசாத் தெரு, எம்.கே.பி. நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 2) ஆரோன் தாஸ் நல்வழி தெரு, சமாதானபுரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 3) சங்கர் சிவன் கோவில் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. 4) கே. முருகன் 25-2, 4வது தெரு, ராஜா நகர், மேலப்பாளையம் - 627005, திருநெல்வேலி.

திருநெல்வேலி மேற்கு மாநகரம்

அமைப்பாளர் - சி. வேலாயுதம் (எ) சரவணன் சிவா தெரு, திருநெல்வேலி டவுன். துணை அமைப்பாளர்கள - 1) பேச்சிமுத்து 79, முத்துராமலிங்கபுரம், திருநெல்வேலி டவுன் - 627006. 2) என். காஜாமைதீன் 13ஏ, ஆர்.பி. மேல புதுமனை தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) ஈஸ்வரன் 29, செண்பகம் பிள்ளை தெரு, திருநெல்வேலி டவுன் - 627006. 4) பரமசிவன் ஆதிதிராவிடர் வடக்கு தெரு, சத்திரம் புதுக்குளம், தச்சநல்லூர், திருநெல்வேலி.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 08-09-2025.

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று (08.09.2025) பூவிருந்தவல்லி இராஜலட்சுமி தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் குவாண்டம் ஆய்வகத்தினை திறந்து வைத்தார். உடன் IBM நிறுவன Quantum India Lead L.வெங்கடசுப்பிரமணியம், இராஜலட்சுமி தொழில்நுட்ப நிறுவன தலைவர் மருத்துவர் தங்கம் மேகநாதன், துணை தலைவர் மருத்துவர் ஹரி சங்கர் மேகநாதன் மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர்.

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி 55 வது வட்ட துணைச் செயலாளர் என். குணசேகரன் கவிதா, இல்ல திருமண விழா அண்மையில் நடைபெற்றது. இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா, எம். எல் .ஏ, துணை மேயர் டி. காமராஜ், 4 வது மண்டல குழு தலைவர் டி காமராஜ், பகுதி செயலாளர் எஸ். சேகர் எம் .சி, பகுதி துணை செயலாளர் பி .புகழேந்தி எம் .சி, பொதுக்குழு உறுப்பினர் சங்கர், எஸ். கணேசன், கோவிந்தராஜ் ,விஜய், ஆனந்த், குமரவேல், அருள் ,டி .கே . கோட்டி, இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், சுந்தர் ,பி .சுரேஷ் ,ராஜ், ராஜா ,ஜசக் ,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.